திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இறால் வளர்க்கக்கூடிய பண்ணைகள் இன்னும எந்த எந்த இடத்தில் அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு அரசுக்கு இறால் வளர்ப்பு மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்புக்காக உகந்தது உவர் நீர் பகுதிகள் ஆகும். நான் முதலில் குறிப்பிட்ட 10 இடங்களில் இந்த 'மாதிரி பண்ணைகள்' அமைக்கப்பட்டு அதனுடைய வெற்றியைப் பொறுத்து மேலும் உவர் நீர் பகுதிகளில் இப்படிப்பட்ட பண்ணைகளை அமைப்பதன் மூலம் ஊக்குவிக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது. எவ்வளவு இறால் விற்பனை ஆகியது என்ற விவர குறிப்புகள் இல்லை. தனி கேள்வி போட்டால் விவர குறிப்புகள் தரலாம்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரங்காடு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் இறால் பண்ணை அமைக்க பொருத்தமாக இருக்கிறது. அந்த இடத்தில் தனியார் பண்ணை ஆரம்பிக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரிப் பண்ணையை தொடர்ந்து கூடுமானவரையில் கூட்டுறவு பண்ணைக்கு ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தில் இதை மேற்கொண்டிருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட கூட்டுறவு முறையில் யாரும் முன்வராத நிலை இருக்குமானால் அதற்கு பங்கு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனைகளை நாம் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

*வினா எண் 03 திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எந்தெந்த கிராமங்கள் எந்தத் தாலுகாவில் இருக்கும்?

மாண்புமிகு திரு எஸ் டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் இ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு இடையிலே மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு டிஸ்ரிக்ட் கெசட் நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறார்கள். அதிலே பிரிக்கப்பட்டதாகவே போட்டிருக்கிறார்கள். அதிலே பல கிராமங்கள், அம்பாசமுத்திரத்தை ஒட்டி இருக்கிற சில கிராமங்களை அம்பாசமுத்திரத்துடைய தாலுகாவில் சேர்ப்பதற்கு பதிலாக-குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் ஆற்றின் அக்கரையிலே கல்லிடைக்குறிச்சி, இக்கரையிலே அம்பாசமுத்திரம். அந்தக் கல்லிடைக்குறிச்சியை அம்பாசமுத்திரம் தாலுகாவில் சேர்ப்பதற்குப் பதிலாக 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய சேரன்மாதேவி பகுதியில் சேர்த்து இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதேபோல காட்டுப்பத்து என்ற ஒரு கிராமம், அது அம்பாசமுத்திரத்திற்கு வந்ததற்கு பிறகுதான் சேரன்மாதேவிக்கு 15 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். இதைப் போன்று பள்ளக்கால், பனஞ்சாடி, இடைக்கால், வளுதூர், கபால்பாறை, செங்கணம் ரெங்க சமுத்திரம் போன்ற பல்வேறு கிராமங்கள் அம்பாசமுத்திரம் வந்து தலை நகரை தொட்டுவிட்டு அதற்குப்பிறகு சேரன்மாதேவிக்கு 15 கிலோ மீட்டர் போகக்கூடிய முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது அரசினுடைய கவனத்திற்குகொண்டுவரப்பட்டதா? அதன் மீது அரசு என்னநிலை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் வருவாய் வட்டத்திதை இரண்டாகப் பிரிக்கிற யோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப் பிரிக்கிறபோது எந்த எந்தப் பகுதிகளை எங்கெங்கே சேர்க்கவேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அரசு, எந்த எந்தப் பகுதிகளை அதிலே சேர்க்கலாம் என்பதுபற்றி அங்கே உள்ளவர்களின் எண்ணங்களை அறிந்துகொண்டு தக்க நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடுகள் எல்லாம் அரசுக்கு வந்திருக்கிறது அவைகளையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதற்காக நான் அரசுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களைத் பிரிக்கிறபோது அரசாங்கம் நல்ல நோக்கத்தோடுதான் பிரிக்கிறது என்று கருதுகிறேன். பக்கத்திலே உள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தலைநகருக்கு வந்துபோவதற்கு வசதியாக பக்கத்தில் இருக்கும் என்ற முறையிலேதான் அதைப் பரிசீலிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எந்த எந்த கிராமங்கள்

எந்த எந்த தாலுகாவிற்குப் பக்கத்திலே இருக்கின்றன என்பதை முறையாக வைத்துக் கொண்டு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. யூனியன் அடிப்படையில், பிர்க்கா அடிப்படையில் வைத்துக்கொண்டு கெஜட் நோடிபிகேஷன் விடப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, கிராமங்கள் அந்த அந்தத் தாலுகாவுக்குப் பக்கத்திலே இருக்கவேண்டுமென்று கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவைகளைப் பிரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்தந்தக் கிராமங்களின மக்களுடைய தேவைக்கு அவர்களுடைய நலன் களுக்கு உகந்தவகையில் அந்தக் காரியங்கள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, விரிந்துகிடக்கும் ஒரு சில வருவாய்க் கோட்டங்களை அரசினுடைய நிலையை யொட்டி இரண்டாகப் பிரிந்து நிர்வாக வசதிக்காக ஏற்பாடு செய்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். அப்படி ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சில டிவிஷன்கள், வருவாய்க்கோட்டங்கள் மிகப் பெரிதாக இருக்கின்றன நிர்வாக வசதியை மனதிலே வைத்து அரசு சிலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி வருவாய்கோட்டங்களைப் பிரித்து அவினாசி பல்லடம், ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கி திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க இந்த வருடம் அரசு முடிவு செய்திருக்கிறது. கோயம்புத்தூர், பொள்ளாச்சி திருப்பூர் ஆகியவை தனித்தனி வருவாய் கோட்டங்களாக இருக்கும். அதேபோல் சிதம்பரம் காட்டுமன்னார் கோயில் இரண்டையும் சேர்த்து வருவாய் கோட்டமாகவும் பண்ருட்டி. கடலூர் இரண்டையும் சேர்த்து வருவாய் கோட்டமாகவும் பிரித்து அரசு உத்திரவு வழங்க இருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வருவாய அடிப்படையாக வைத்து சில கோட்டங்களைப் பிரிப்பதாகச் சொன்னார்கள். குடியாத்தம் தாலுகா பெரியதாக இருக்கிறது. அதைப் பிரிக்கவேண்டுமென்று பல முறைகள் நான் மட்டும் அல்ல, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே வற்புறுத்தியிருக்கிறோம். நான் அதற்காக இரண்டு முறைகள் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அது சம்பந்தமாக தகவல் இல்லை, அது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய் அடிப்படையில் மட்டும் பிரிப்பதில்லை. அங்கே இருக்கின்ற ஜனத்தொகை, பரப்பளவு, இடத்தின் பின் தங்கிய தன்மை ஆகியவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பிரிப்பதாக இருக்கிறது. உங்களுடைய கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ் சிவராமன்: தலைவர் அவர்களே, வருவாய்க் கோட்டங்களை இரண்டாகப் பிரிப்பதுபோன்ற பல நிர்வாக வசதிகளுக்காக செய்யப்படுகின்ற திட்டங்களின் அடிப்படையில் பெரிதாக இருக்கக்கூடிய பல தாலுக்காக்களை பிரிப்பதற்கு அரசு முன்வருமா? அந்த அடிப்படையில் கள்ளக்குறிச்சித் தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருந்துகொண்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது எப்போது இரண்டாகப் பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே பதில் அடங்கியிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: வட ஆற்காடு மாவட்டத்திலே குடியாத்தம் கோட்டம் மிகப் பெரியதாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து காட்பாடியை தலைநகராகக் கொண்டு அமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலே பல கோட்டங்கள் பெரியதாக இருக்கின்றன. அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக அரசு பிரிக்கும். இந்த ஆண்டிலே இரண்டு கோட்டங்களைப் பிரிக்க அரசு உத்திரவிடும் என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: இந்த வருவாய்க் கோட்டங்களை அல்லது வட்டங்களைப் பிரிக்கிறபோது அதிகாரிகள் சொல்கிற பிரிவினைகளை அரசு ஏற்றுக் கொள்கிற காரணத்தினால்தான் பக்கத்திலே உள்ள கிராமங்கள் தூரத்திலே உள்ள இடத்தோடும், தூரத்திலே உள்ள இடங்கள் வேறு மாதிரியாகவும் சேர்க்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த அந்தப் பகுதிகளிலே உள்ள அரசியல் கட்சிகளைக் கலந்துகொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சொன்னதை வைத்துப் பிரித்ததினாலே, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்று சொல்வது ஒரு குற்றச்சாட்டாக இருக்கிறது. அதிகாரிகளே பொதுமக்களுடைய நலனுக்காகத்தான் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்கே

யாவது குறிப்பிட்ட இடங்களில் இப்படி பிரிக்கப்பட்டது பொது மக்களுக்கு இடையூறு என்று அவர் சொன்னால், அதை மீண்டும் பரிசீலனை செய்து, பொது மக்களுடைய நன்மைக்காக, மாற்றியமைக்க அரசு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாலூகாக்கள் மக்கள்தொகை அடிப்படையிலும், பரப்பளவின் அடிப்படையிலும் பிரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பழனி தாலூகா ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை 45 மைல், 50 மைல்கள் போகிறது. மக்கள் தொகை 7 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது. ஆகவே, பழனி, ஒட்டன்சத்திரம் என்று இரு தாலூகாக்களாகப் பிரிப்பதற்கு அரசிடம் ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 104, 105, 106, 107 ஆகியவை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

1981 ஆம் ஆண்டில் மதுரை மத்திய சிறைச்சாலையில் மரணமடைந்த கைதிகளின் எண்ணிக்கை.

*வினா எண் 108—திரு. என். வரதராஜன் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1981 ஆம் ஆண்டில் மதுரை மத்திய சிறைச்சாலையில் மரணமடைந்த கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) இந்த மரணங்கள் என்ன காரணங்களால் ஏற்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 14 (பதினான்கு)

(ஆ) 13 (பதிமூன்று) பேர் நோயால் பாதிக்கப்பட்டும் ஒருவர் தூக்கிட்டுக்கொண்டும் மரணமடைந்தனர்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறைக்கூடம் என்பதே மிகப் பாதுகாப்பான ஒரு இடம். அந்த இடத்திலே சோதனையிடப்பட்டு நாம் உள்ளே பூட்டி வைத்திருக்கிறோம். அந்த இடத்திலே தூக்கிட்டு இறந்து விடுகிறார்கள் என்று இன்று சொல்லப்படுகிறது. இதுசம்பந்த